**விரைவு நீதிமன்றம், காரைக்குடி**

**முன்னிலை : செல்வி. செ. ஜெயப்பிரதா, B.Sc.,B.L.,(Hon's)**

**நீதித்துறை குற்றவியல் நடுவர்,**

**விரைவு நீதிமன்றம், காரைக்குடி.**

**2025 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 26 ம் நாள் புதன்கிழமை**

**குற்றவியல் பல்வகை மனு எண்.2894/2024**

**இன்**

**ஆண்டுப் பட்டிகை வழக்கு எண் :22/2024**

வீரமணிகண்டன் ......மனுதாரர்/எதிரி

/எதிர்/

நாராயணன் .......எதிர்மனுதாரர்/புகார்தாரர்

இம்மனுவானது, கடந்த 24.12.2024-ம் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு என் முன்பாக இன்று 10.01.2025-ம் தேதியில் இறுதி விசாரணைக்காக வந்தபொழுது, மனுதாரருக்காக கற்றறிந்த வழக்குரைஞர் திரு.எம்.குமார் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரருக்காக கற்றறிந்த வழக்குரைஞர் திரு.வி.பி.கமல்தயாளன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும் மனு, எதிருரை மற்றும் ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும், இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்புவிக்கும்

**உத்தரவு**

இம்மனுவானது, மனுதாரர்/எதிரி தரப்பில் ம.சா.1 ஐ குறுக்கு விசாரணை செய்ய உத்தரவிட அனுமதிகோரி பி.என்.எஸ்.எஸ். பிரிவு 348-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

**1. மனுச்சுருக்கம்**

மேற்படி வழக்கில் ம.சா.1 முதல் விசாரணை செய்யப்பட்டு உள்ளது. ஆனால் அந்த சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை. மேற்படி சாட்சிகளின் குறுக்கு விசாரணை இந்த வழக்குக்கு மிகவும் அவசியமாக இருக்கிறது. சாட்சிகளின் படியை கட்ட எதிரி தயாராக இருக்கிறார். ஆகையால் மேற்படி மனுவை ஏற்று மேற்படி சாட்சியை மறுபடியும் வரவழைத்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதிகோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2.எதிருரை**

1) மேற்படி வழக்கில் மனுதாரர்/எதிரி தரப்பில் BNSS சட்டம் பிரிவு 348-ன் கீழ் தாக்கல் செய்திருக்கும் மனு சட்டப்படியும், நியாயப்படியும் நிலைநிற்கத்தக்கதல்ல. மேற்கண்ட மனுவில் 24.12.2024 அன்று ம.சா.1 ஐ குறுக்கு விசாரணை செய்ய சொல்லி தாக்கல் செய்திருக்கும் மனுவும் சட்டப்படியும், நியாயப்படியும் நிலைநிற்கத்தக்கதல்ல. மேற்கண்ட வழககும் புகார்தாரர் தரப்பு மற்ற சாட்சிக்காக வாய்தா ஏற்பட்டுள்ளது. புகார்தாரர் நீதிமன்றத்தில் தொடர்ந்து ஆஜராகி தனது தரப்பில் கடந்த 15.05.2024 ம் தேதியன்று நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்து அதில் தனது தரப்பு ஆவணங்களாக ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.7 வரையிலான ஆவணங்களை குறியீடு செய்துள்ளார். மேலும் மனுதாரர்/எதிரி தரப்பில் மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 145(2)-ன் படி எந்த ஒரு மனுவினையும் நீதிமன்றத்தில் அன்றைய தினம் தாக்கல் செய்யவில்லை. அன்றைய தினம் குறுக்கு விசாரணை செய்ய மனுதாரர்/எதிரி தரப்பில் எந்த நடவடிக்கையும் செய்யாத காரணத்தினால் அன்றைய தினம் ம.சா.1 விசாரணை முடித்து வைக்கப்பட்டது. அதன்பின்னர் புகார்தாரர் தரப்பு மற்ற சாட்சிகளுக்காக கடந்த 15.05.2024, 27.05.2024 ஆகிய தேதிகளில் வாய்தாக்கள் ஏற்பட்டு கடந்த 11.06.2024 ம் தேதியன்று புகார்தாரர் தரப்பில் மனுதாக்கல் செய்யப்பட்டு மேற்கண்ட மனுவும் உரிய விசாரணைக்கு பின்னர் அனுமதிக்கப்பட்டு புகார்தாரர் தரப்பில் ம.சா.2, ம.சா.3 மற்றும் ம.சா.4 ஆகிய சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். அதன்பின்னர் புகார்தாரர் தரப்பு சாட்சி விசாரணையில் கடந்த 29.10.2024 ம் தேதியன்று முடித்து வைக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுதாரர்/எதிரியும் 11.11.2024 ம் தேதியன்று நீதிமன்றத்தின் மூலம் Section 313(1)(பி) Cr.P.C படி கேள்விகள் கேட்கப்பட்ட போதும் மனுதாரர்/எதிரியும் தனது தரப்பில் எந்த வகையான சாட்சியினை குறித்து தெரிவிக்கவில்லை.

2) அதன்பின்னர் எதிரி தரப்பு சாட்சி விசாரணைக்காக 26.11.2024, 10.12.2024, 24.12.2024 ஆகிய தேதிகளில் வாய்தாக்கள் ஏற்பட்டு எதிரி தனது தரப்பு சாட்சிகளை நீதிமன்றத்தில் விசாரணை செய்யாமல் 15.05.2024 ம் தேதியன்று நிறுத்தி வைக்கப்பட்ட ம.சா.1 சாட்சியினை மீண்டும் குறுக்கு

விசாரணை செய்ய திரும்ப அழைக்க வேண்டி தாக்கல் செய்திருக்கும் மனுவும் சட்டப்படியும், நியாயப்படியும் நிலைநிற்கத்தக்கதல்ல. மேலும் 15.05.2024, 27.05.2024, 11.06.2024, 25.06.2024, 06.07.2024, 02.08.2024, 20.08.2024, 29.08.2024, 24.09.2024, 10.10.2024, 29.10.2024, 11.11.2024, 26.11.2024, 10.12.2024 மேற்கண்ட வாய்தாக்களில் மனுதாரர்/எதிரி தரப்பில் ஏன் மேற்கண்ட மனுவினை தாக்கல் செய்யாமலும் புகார்தாரரை அலைக்கழிவு செய்ய வேண்டும் என்ற நோக்கத்திலும், புகார்தாரருக்கு மனஉளைச்சலை ஏற்படுத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்திலும் இந்த மனுவை காலம் தாழ்த்தி மனுதாரர் தாக்கல் செய்துள்ளார். மேலும் கடந்த 15.05.2024 ம் தேதியன்று மனுதாரர்/எதிரி நீதிமன்றம் ஆஜராகியுள்ளார். அதன் பின்னர் 27.05.2024, 25.06.2024, 06.07.2024, 10.10.2024,11.11.2024 ஆகிய தேதிகளில் எதிரியும் நீதிமன்றத்தில் ஆஜராகி இருந்த பட்சத்தில் மேற்கண்ட மனுவில் கூறியுள்ள சங்கதிகளும் வழக்கினை வீண்காலதாமதம் செய்ய வேண்டும் என்றும், மேற்கண்ட மனு அனுமதிக்கப்பட்டால் எதிர்மனுதாரர்/புகார்தாரருக்குஈடு செய்ய முடியாத இழப்பும், கஷ்ட, நஷ்டமும் ஏற்பட்டுவிடும். மேற்படி மனுதாரர்/எதிரி தரப்பில் தாக்கல் செய்திருக்கும் மனுவினை எதிர்மனுதாரர்/புகார்தாரர் தரப்பு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டி எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. <u>தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை</u>**

மனுதாரர் தாக்கல் செய்திருக்கும் இம்மனுவானது அனுமதிக்கப்படவேண்டிய ஒன்றா அல்லது இல்லையா?

**4. <u>பிரச்சனைக்குரிய தீர்வு</u>**

1)இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. மனுதாரர் தாக்கல் செய்திருக்கும் இம்மனுவானது அனுமதிக்கப்படவேண்டிய ஒன்றா என்பது குறித்து பார்க்கும்போது மூலவழக்கானது மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம் பிரிவு 138-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டு எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு எதிரி தரப்பு சாட்சியத்திற்காக வாய்தா ஏற்பட்டுள்ள நிலையில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு கோப்புகளை பரிசீலனை செய்ததில் ம.சா.1 ஐ குறுக்கு விசாரணை செய்யவில்லை என்று அறியமுடிகிறது. ஆகவே, தரப்பினருக்கு உரிய

வாய்ப்புகள் அளிக்கப்பட வேண்டுமென்று இயற்கை நியதியின் அடிப்படையில் மனுதாரர்/எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மேற்படி மனுவும் அனுமதிப்பது அவசியமானதென்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

இறுதியாக, மனுதாரர்/எதிரி தரப்பில் தாக்கல் செய்திருக்கும் மனுவானது அனுமதி செய்து உத்தரவிடப்படுகிறது. மனுதாரர் எதிர்மனுதாரருக்கு ரூ.1000/- செலுத்தவேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவானது, என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழை நீக்கம் செய்யப்பட்டு 2025ம் ஆண்டு மார்ச் 26-ம் நாள் புதன்கிழமை திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

(ஒப்பம். செல்வி. செ.ஜெயப்பிரதா, B.Sc., B.L., (Hon's))
நீதித்துறை குற்றவியல் நடுவர்,
விரைவு நீதிமன்றம், காரைக்குடி.